**தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் - 2013**

தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1981 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. குறித்த நிதியதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் சுகாதார அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அவ்வதிகாரச் சட்டத்தின் 10(4) ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் நிதிய நடவடிக்கைகளது நிர்வாகம் தொடர்பான எனது அறிக்கை கீழே குறிப்பிடப்பட்ட பந்திகளிலும் வருமான மற்றும் செலவினக் கூற்று இணைப்பு 1 ஆகவும் நிதியத்திற்குச் சொந்தமான பண முதலீடுகள் தொடர்பான கூற்று இணைப்பு 2 ஆகவும் காட்டப்பட்டுள்ளன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனங்களது சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSA/100-18010) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.**

(அ) முன்னைய ஆண்டிற்கான ரூபா 239,596 சீராக்கலானது கடந்த கால அடிப்படையில் அல்லாது மிளாய்வாண்டினது ஏனைய வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2014 டிசெம்பர் 12 ஆந் திகதியளவில் ரூபா 1,972,152 கிரயமுடைய Dengu Igm Elisa 96 ரகத்தைச் சார்ந்த 52 தொகுதிகள் எஞ்சியிருந்தன. அவற்றுள் 33 தொகுதிகள் 2014 ஒக்டோபர் 30 அன்று காலாவதியாகியிருந்தன. எஞ்சிய தொகுதியினது பாவனைக்காலம் 2014 டிசெம்பர் 23 அன்று முடிவடைய இருந்தது. எவ்வாறாயினும், இதன் பொருட்டு நிதிக்கூற்றுக்களில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

(இ) டெங்கு ஒழிப்பு செயற்திட்டத்திற்காக 10 Viral Extraction தொகுதிகள் 2013 மார்ச் 14 அன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2014 ஆகஸ்ட் 22 ஆந் திகதியன்று பௌதீக பரிசோதனையின் போது ரூபா 435,000 பெறுமதியான 5 தொகுதிகள் எஞ்சியிருக்கக் காணப்பட்டன. அவை 2013 செப்டம்பரில் காலாவதியாகியிருந்தன. இது தொடர்பாக நிதியேற்பாடு நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) 2013 மார்ச் 14 ஆந் திகதியன்று ரூபா 242,500 பெறுமதியான Thermo Read TM Tag DNA Pd Ymer 1000Y ரகத்தைச் சேர்ந்த 25 vials கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2014 ஆகஸ்ட் 22 ஆந் திகதியளவில் ரூபா 232,800 பெறுமதியான 24 பெறுமதியான vials பயன்படுத்தப்படாது எஞ்சியிருந்ததுடன் அவை காலாவதியாகியும் இருந்தன. இதன் பொருட்டு நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

### 2.2.2 பெற வேண்டிய கணக்குகள்

நிர்மாண வேலைகள் குறித்தவாறு முடிவுறுத்தப்படாததன் காரணமாக இரத்துச் செய்யப்பட்ட ஒப்பந்தம் ஒன்றுடன் தொடர்புடைய காப்புறுதிக் கம்பனியிடமிருந்து பெற வேண்டிய ரூபா 1,372,346 செயலாற்றல் பிணை முறியானது 6 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (அ) நிதிப்பிரமாணம் 751 | டெங்கு செயற்திட்டத்துடன் தொடர்புடைய ஆய்வுகூடத்திற்கு மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 20,036,550 பெறுமதியான பெறுமதியான பொருட்கள் ஆய்வுகூடத்தில் பதிவு செய்யப்படாதிருந்தன. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 756 | சகல திணைக்களங்களது பொருட்களும் வருடாந்தம் பொருள் மெய்மையாய்விற்கு உள்ளாக வேண்டுமாயினும், பெருமளவு பெறுமதி வாய்ந்த கொள்வனவுகள் நடைபெறும் டெங்கு செயற்திட்டத்திற்குரிய ஆய்வுகூடத்தின் அவ்வாறு வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினது செயற்பாட்டு நடவடிக்கைகளால் ஏற்பட்ட பற்றாக்குறை ரூபா 46,900,783 ஆக இருந்ததுடன், இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 102,502,994 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 149,403,777 வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததுடன் இதற்குப் பிரதான காரணியாக சுகாதார அபிவிருத்திச் செயற்திட்டச் செலவினம் ரூபா 193,284,550 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக தாக்கமளித்திருந்தது.

**3.2 நிதியத்தின் அமைப்பு**

லொத்தர் வருமானத்தையும் வட்டி வருமானத்தையும் உள்ளடக்கிய பொது நிதியத்தினது ரூபா 172,006,888, ஆலும் உள்நாட்டு ரீதியாகப் பெறப்பட்ட நன்கொடைத் தொகையாகிய ரூபா 108,159,078, ஆகும். வெளிநாட்டு நன்கொடையாக நேரடியாகப் பெறப்படும் ரூபா 65,473,802 ஆலும் இந் நிதியம் கொண்டிருந்தது. நிதியத்திற்கு வெளிநாட்டு உதவியாக கிடைத்த பணத்தொகையை வெளிநாட்டு உதவியாக வேறாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கவோ வேறாக வெளிக்காட்டவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2004 ஆம் ஆண்டில் த சொய்சா மகளிர் வைத்தியசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென நிதியம் ஒன்று தாபிக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் வைத்தியசாலையின் மிகப் பழமை வாய்ந்த கட்டிடத்தை நவீனமயப்படுத்தலும் பராமரிப்பதும் நோக்கமாக இருந்தது. எவ்வாறாயினும், 2004 ஆம் ஆண்டு முதல் 2013 டிசெம்பர் 31 வரை இதன் மூலம் வர்ணந் தீட்டுவதும் யன்னல் திரைச்சீலைகளை இடுவது போன்ற சிறு செயற்பாடுகள் மாத்திரமே நடைபெற்றிருந்ததுடன், மீளாய்வாண்டு முடிவில் நிதியத்தின் மீதி ரூபா 1,647,495 ஆகவுமிருந்தது. இதற்கமைய, மேற்படி நிதியத்தை தாபித்தற்கான நோக்கம் நிறைவேறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததுடன் நிதியத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) கொழும்பு ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் இருதய சிகிச்சைக்கான கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கெனச் சேகரிக்கப்பட்ட பொது மக்களது உதவிப் பணத்தை சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் கீழ் கணக்கிலிடுவதற்கு நிதியப் பொறுப்புச் சபை 2005 ஆம் ஆண்டில் தீர்மானித்திருந்தது. இதற்கமைய, 2005 முதல் 2008 வரை பல்வேறு நன்கொடையாளர்களிடமிருந்து ரூபா 947,101 சேகரிக்கப்பட்டிருந்தது. எனினும், 2008 ஆம் ஆண்டின் பின்னர் 2013 டிசெம்பர் 31 வரை பணம் எதுவும் பெறப்படவில்லை.

(இ) 2008 ஆம் ஆண்டில் இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினால் ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் படை வீரர்களுக்கு தேவைப்படும் வைத்திய உபகரணங்களைப் பெறுவதற்காக நிதியத்திற்கு ரூபா 10,000,000 தொகை நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தது. அந்நன்கொடையின் 58.51 சதவீதத்திகுச் சமமான ரூபா 5,850,888 மீதியானது அப்பணிக்குப் பயன்படுத்தப்படாது 2013 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் நிதியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

2013 ஆம் ஆண்டில் சிறுநீரக நோயாளிகளுக்கு சிகிச்சை முகாம்களை நடாத்துவதற்காக ரூபா 783,200 மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 545,614 ஆக இருந்தது. அச் செலவினத்தில் 69 சதவீதம் அதாவது ரூபா 376,780 பிரயாணச் செலவினத்திற்காவே மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், பிரயாண வசதிகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனங்களிலிருந்து ஏற்றுக்கொள்ளக் கூடியவாறான பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

Dengu Igm Elisa 96 ரகத்தைச் சேர்ந்த 120 தொகுதிகள் ரூபா 4,551,220 செலவில் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஒரு தொகுதியின் மூலம் 96 பரீசீலனைகளை மேற்கொள்ள முடியும். 2012 , 2013 ஆம் ஆண்டுகளில் முறையே 1,026 மற்றும் 1,098 பரீசீலனைகள் மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்கமைய 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ஏறக்குறைய 23 தொகுதி Igm Elisa க்கு ரூபா 4,551,220 செலவிட்டு அந்த ரகத்தைச் சேர்ந்த 120 தொகுதிகள் கொள்வனவு செய்தமையால் மிகை கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.4 குறைவான நிதியப் பயன்பாடு

நிதியத்தின் ஒட்டு மொத்தச் சொத்துக்கள் ரூபா 372 மில்லியன் ஆகும். இதில் ரூபா 312 மில்லியன் குறுகிய கால முதலீடுகளில் இடப்பட்டிருந்தன. நிதியத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு கவனம் செலுத்தப்படாமல் முற்படாது இத் தொகையானது தொடர்ச்சியாக முதலீடாக இத் தொகையை வைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.5 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

05 நிர்மாண மற்றும் பராமரிப்பு வேலைகளுக்கெனப் பெறப்பட்ட ரூபா 6,711,979 கூட்டுத்தொகையானது 7 முதல் 26 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் குறித்த செயற்பாடு நிறைவேற்றப்படாது முழுத்தொகையும் பயனற்றிருந்தது.

## 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தேசிய இரத்த தான வேலை மூலம் நடாத்தப்படும் கல்விசார் செயலமர்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் 159 பேர் செயலமர்வில் பங்குபற்றுபவர் என எதிர்பார்க்கப்பட்டபோதும் 122 பேர் மாத்திரமே பங்குபற்றியிருந்தனர். அத்தினத்தன்று செயலமர்வில் கலந்து கொள்ளும் உத்தியோகத்தர்களது எண்ணிக்கை ஏற்கனவே உறுதிசெய்யப்படுவதற்கான நடைமுறை இல்லாமையால் 200 பேருக்கு உணவு வழங்குவதற்காக ரூபா 124,410 கூடுதலாகச் செலவிடப்பட்டிருந்தது.

## 4.7 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) செத்சிரிபாயாவின் 11 ஆம் மாடியில் புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் அலுவலகத்தை அமைப்பதற்கு சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் மூலம் நிதியேற்பாடு செலவிடத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அப் பணிக்கு அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் மூலம் வரி அடங்கலாக ரூபா 3,202,797 தொகைக்கு சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் 2013 ஒக்டோபர் 11 ஆந் திகதியன்று ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த வேலை 3 மாதங்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது.

இது தொடர்பாகப் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) ஒப்பந்த வழங்கல் கடிதத்தினது V ஆம் பந்தியின் பிரகாரம் குறித்த ஒப்பந்தம் தொடர்பாக முறையான உடன்படிக்கை செய்து கொள்ளப்படவில்லை.

(ii) குறித்த கடிதத்தின் III ஆம் பந்தியின் பிரகாரம் ஒப்பந்தக் காலம் எவ்விதத்திலேனும் நீடிக்கப்படாதென்றும் குறித்த காலத்திற்குள் ஒப்பந்த வேலையை பூர்த்தி செய்ய தவறினால் தாமதக் காலத்தின் பொருட்டு உடன்படிக்கைப் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒப்பந்த வேலை 2014 ஜனவரி 20 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதும் 2014 பெப்ரவரி 20 ஆந் திகதியன்றே வேலை முடிவடைந்திருந்தது. முறைப்படி அமைந்த உடன்படிக்கை இல்லாமையால் தாமதக் கட்டணத்தை அறவிட முடியாது போயிற்று.

(iii) இறுதி விலைப்பட்டியலுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் 1 ஆம் இலக்கத்தின் கீழ் ஆரம்ப வேலைகள் (preliminaries) ஆக ரூபா 111,058 வேலைப் பெறுமதி குறிப்பிடப்பட்டிருந்தபோதும், அதன் கீழ் எவ்வகை

வேலை நடைபெற்றது என்பதைக் கணக்காய்வின் போது உறுதி செய்ய முடியாதிருந்தது.

(iv) இறுதி விலைப்பட்டியலில் செய்த வேலைகளது பெறுமதியாக ரூபா 2,452,522 குறிப்பிடப்பட்டிருந்தபோதும், அவ் வேலைப் பெறுமதியை உறுதி செய்வதற்குப் போதுமான பொறியியலாளரால் சான்றுதிப்படுத்தப்பட்ட விரிவான வேலை விபரமும் அளவைத் தாள்களும் விலைப் பட்டியலுடன் சமர்ப்பிக்கப்படாதிருந்தன.

(ஆ) அனுராதபுரம், பொலன்னருவை ஆகிய மாவட்டங்களில் 20 சிகிச்சை முகாம் நிலையங்களை நிர்மாணிப்பது தொடர்பான ஓராண்டிற்கான பராமரிப்புக் கால எல்லை முடிவடைந்துள்ளமையால் நூற்றுக்கு 5 சதவீதமான நிறுத்தி வைத்த தொகையான ரூபா 2,682,715 விடுவிக்கப்பட வேண்டுமென உசாத்துணைப் பணியகம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

அநேக நிலையங்களில் குறைபாடுகள் நிலவுவதாக 2012 பெப்ரவரி 27 ஆந் திகதிய களப் பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2012 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய பணிப்பாளர் சபை கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கமைய, சுகாதார அமைச்சின் சிவில் பொறியியலாளருக்கு இச் சுகாதார நிலைய நிர்மாண வேலைகள் தொடர்பாக களப் பரிசோதனையை மேற்கொண்டு பூரண அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கும் அக் களப் பரிசோதனையில் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரையும் பிரதேச சுகாதார வைத்திய உத்தியோகத்தரையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, நிலையங்கள் பரீசீலிக்கப்பட்டதையடுத்து, அமைச்சின் சிவில் பொறியியலாளரால் 2014 செப்டெம்பர் 10 ஆந் திகதியன்று அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிக்கப்பட்டன.

(i) தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட நாட் தொடக்கம் குறித்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு 2 ஆண்டுகள் கழிந்திருந்தபோதும், குறைபாடுகள் நிலவிய நிலையங்கள் எவை என இணங்காணப்படாதிருந்தன.

(ii) குறித்த களப் பரிசோதனைகளில் பிரதேச சுகாதாரப் பணிப்பாளரும் பிரதேச சுகாதார வைத்திய உத்தியோகத்தரும் கலந்து கொண்டமைக்கான உறுதிப்படுத்தும் சான்றுகள் காணப்படவில்லை.

(இ) எதாவெடுனுவெவ சுகாதார நிலைய நிர்மாண வேலைக்கான ஒப்பந்தம் ரூபா 5,334,273 பெறுமதியில் வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வேலை முடிவுறும் திகதி 2013 ஜுலை 27 ஆகும். 2013 செப்டெம்பர் 27 வரை நாள் நீடிப்பு வழங்கப்பட்டிருந்தபோதும், கணக்காய்வுத் தினமான 2014 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டமை அறிவிக்கப்படாதிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் நிதியத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் பொது நிதியத்தில் கருத்திற் கொள்ளக்கூடிய தொகை இருந்தபோதும் குறித்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக முறையான ஆக்கபூர்வப் ஈடுபடுத்தாமல் இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. கடந்த சில ஆண்டுகளின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது திட்டத்தில் காணப்பட்ட நிதிய மீதிகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | நிதிய மீதி ரூபா |
|---|---|
| 2013 | 172,006,888 |
| 2012 | 178,932,521 |
| 2011 | 110,895,505 |
| 2010 | 130,814,586 |

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களைக் கருத்திற் கொள்ளுமிடத்து கண் வங்கிச் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 16,500,000 ஆகும். உள்ளவாறான செலவினம் ரூபா 24,246,000 ஆகும். இதனால் உள்ளவாறான பெறுமதி 46 சதவீதம் அதிகரித்துள்ளதுடன் வாகனப் பழுதுபார்ப்பதற்காக ரூபா 100,000 மதிப்பிடப்பட்டிருந்த போதும், ஆண்டின் போது செலவு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) முற்பணம்
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) களஞ்சியக் கட்டுப்பாடு

**இணைப்பு 01**

**வருமான, செலவினக் கூற்று**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியத்தின் வருமானம், செலவினம் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டுக் கீழே காணப்பட்டுள்ளன.

| **வருமானம்** | **2013** | | **2012** | |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| ஜாதிக சம்பத லொத்தர் வருமானம் | 61,357,280 | | 52,560,260 | |
| நன்கொடை | 162,998,913 | | 155,139,494 | |
| முதலீட்டு வட்டி | 35,699,162 | | 30,538,493 | |
| ஏனைய வருமானம் | 33,244,203 | | 9,878,521 | |
| | | 293,299,558 | | 248,116,768 |
| **செலவினம்** | | | | |
| நிர்வாகச் செலவினம் | 2,004,795 | | 1,597,636 | |
| நிதிசார் மற்றும் ஏனைய செலவினம் | 24,150 | | 16,420 | |
| சுகாதார அபிவிருத்திச் செயற்திட்டச் செலவினம் | 338,410,992 | | 145,126,441 | |
| | | 340,439,937 | | 146,740,497 |
| பற்றாக்குறை / மிகை | | (47,140,379) | | 101,376,271 |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் | | 239,596 | | 1,126,723 |
| | | (46,900,783) | | 102,502,994 |

**முதலீட்டுக் கூற்று** **இணைப்பு 02**

நிலையான வைப்புக்கள் – மக்கள் வங்கி

| **சான்றிதழ் இலக்கம்** | **முதலீட்டுத் திகதி** | **முதலீட்டுக் காலம்** | **2013 ஜனவரி 31 இல் உள்ளவாறான மீதி** | **2013 ஆம் ஆண்டிற்கான முதலீடுகள்** | **2013 ஆம் ஆண்டிற்கான பற்றுதல்கள்** | **2013 டிசெம்பரில் உள்ளவாறான மீதி** |
|---|---|---|---|---|---|---|
| | | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 865632 | 2012/12/21 | 3 மாதங்கள் | 63,000,000 | - | - | 63,000,000 |
| 865633 | 2012/12/21 | 3 மாதங்கள் | 23,000,000 | - | - | 23,000,000 |
| 865615 | 2012/12/12 | 3 மாதங்கள் | 20,000,000 | - | - | 20,000,000 |
| 865614 | 2012/12/12 | 3 மாதங்கள் | 20,000,000 | | | 20,000,000 |
| 865616 | 2012/11/30 | 3 மாதங்கள் | 15,000,000 | - | - | 15,000,000 |
| 331414 | 2012/12/27 | 3 மாதங்கள் | 1,500,000 | - | - | 1,500,000 |
| 379711 | 2012/03/14 | 1 மாதங்கள் | 10,000,000 | - | - | 10,000,000 |
| 865606 | 2013/06/05 | 3 மாதங்கள் | - | 50,000,000 | - | 50,000,000 |
| 865627 | 2013/12/21 | 3 மாதங்கள் | - | 35,000,000 | - | 35,000,000 |
| - | 2013/04/17 | 6 மாதங்கள் | - | 11,000,000 | 11,000,000 | - |
| | | | 152,500,000 | 96,000,000 | 11,000,000 | 237,500,000 |

## திறைசேரி உண்டியல்

### தேசிய சேமிப்பு வங்கி

| சான்றிதழ் இலக்கம் | முதலீட்டுத் திகதி | முதலீட்டுக் காலம் | 2013 ஜனவரி 31 இல் உள்ளவாறான மீதி | 2013 ஆம் ஆண்டிற்கான முதலீடுகள் | 2013 ஆம் ஆண்டிற்கான பற்றுதல்கள் | 2013 டிசெம்பரில் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2010100226 | 2012/10/04 | 91 | 6,244,852 | - | 6,834,947 | - |
| 20101006221 | 2012/06/08 | 357 | 19,592,146 | - | 19,592,146 | - |
| 2010060157 | 2012/06/08 | 357 | 3,569,408 | - | 3,569,408 | - |
| | | | 29,406,406 | | 29,996,501 | |

### இலங்கை வங்கி

| சான்றிதழ் இலக்கம் | முதலீட்டுத் திகதி | முதலீட்டுக் காலம் | 2013 ஜனவரி 31 இல் உள்ளவாறான மீதி | 2013 ஆம் ஆண்டிற்கான முதலீடுகள் | 2013 ஆம் ஆண்டிற்கான பற்றுதல்கள் | 2013 டிசெம்பரில் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|---|---|
| 314 | 2013/03/08 | 350 | 14,388,333 | - | - | 15,863,144 |
| 314 | 2013/12/27 | 182 | 4,721,435 | - | - | 4,816,955 |
| 314 | 2013/05/17 | 91 | 23,505,905 | - | 23,612,346 | - |
| 314 | 2013/05/24 | 182 | 7,556,080 | - | 7,629,944 | - |
| 314 | 2013/03/01 | 182 | 5,883,461 | - | 5,966,168 | - |
| 314 | 2012/08/31 | 364 | 11,475,942 | - | 11,475,942 | - |
| 314 | 2013/10/04 | 161 | 39,425,005 | - | - | 40,038,124 |
| M 10 B – 022269 | 2013/01/07 | 07 | 20,000,000 | - | 20,000,000 | - |
| M 13 B – 026845 | 2013/12/30 | 04 | - | 5,000,000 | - | 5,000,000 |
| M 13 B - 026303 | 2013/12/20 | 13 | - | 9,000,000 | - | 9,000,000 |
| | | | 126,956,161 | 14,000,000 | 68,684,400 | 74,718,223 |
| | | | 156,362,567 | 14,000,000 | 98,680,901 | 74,718,223 |